1980 பிப்ரவரி 7]

Trawlers puschased from Mexico

*Q. No. 85 Thiru SALEM M. ARUMUGAM; Will the Hon. the Ministeror Food be pleased to state :

(a) Whether the State Fisheries Corporation has purchased a number of Trawlers from private firms at Mexico ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. உர்ரா. எட்மண்ட் :

பேரவைமுன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பெற்றுள்ளது.

திரு, சேலம் மு. ஆறுமுகம் : மெக்சிகோவிலிருந்து 80 லட்சம் ரூபாயில் இழு படகுகள் வாங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அப்படி வாங்கிய படகுகள் லாபத்தில் நடக்கின்றனவா அல்லது நட்டத்தில் நடக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. க. உர்ரா. எட்மண்ட் ; இரண்டு இழு படகுகளும் நல்ல லாபத்தைத்தான் கொடுக்கின்றன.

திரு. ந. தனசேகரன் ; லாபத்தில் நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். லாபத்தில் நடக்கிற காரணத்தால் மேலும் ஐந்தாறு இழு படகுகளை வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. உர்ரா. எட்மண்ட்: அதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவர் அவர்களே, தனியார் கம்பெனியிடமிருந்து இந்தப் படகுகள் வாங்கப்பட்டது என்று சொல்கிறார்கள். அந்தப் படகுகள் நம்முடைய நாட்டிலே, இந்தியாவிலேயே வாங்குவதற்கான சூழ்நிலை இல்லையா? இந்தியாவிலேயே அவைகளைத் தயார் செய்து கொடுக்கும் கம்பெனிகள் இல்லையா? அங்கே சென்று வாங்கியதன் நோக்கம் என்ன? அப்படி வாங்கியபோது வேறு எந்த கம்பெனியாகிலும் அதை செய்கிறார்களா என்று பார்க்கப் பட்டதா? ஏனென்றால் ஒரு சைக்கிளை வாங்கவேண்டு மென்றாலும்கூட நாம் 4, 5 இடங்களைச் சுற்றிப் பார்த்துத் தான் வாங்குகிறோம். அந்த முறையிலே 80 லட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்ட இந்தப் படகுகள் தனியார் கம்பெனியிலிருந்து வாங்கப்பட்டு இருக்கிற காரணத்தால் வேறு எந்தக்

* 139–140ம பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கம்பெனிக்கும் சென்று பார்த்து அதன் பிறகு வாங்கப்பட்டதா? டெண்டர்கள் மூலம் வாங்கப்பட்டதா அல்லது தரகர்கள் மூலம் வாங்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய ஒப்புதலோடு அவர்களுடைய ஆலோசனையின்பேரில் 1975 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது மெக்சிகோவிலிருந்து இழு படகுகளை வாங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. அருமையாக சுருக்கமாகச் சொல்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தாங்கள் சொல்வதைப் பார்த்தால் அவர் தான் சுருக்கமாகச் சொல்கிறார், மற்றவர்கள் சுருக்கமாகச் சொல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்வதைப்போல இருக்கிறது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பலமுறைகள் அவர்கள் நீண்ட நேரம் எடுத்துக்கொண்டார்கள். இன்றைக்கு அவர்கள் சுருக்கமாகச் சொன்னார்கள், அதற்காக அவர்களுக்கு நன்றி என்றுதான் சொன்னேன்.

மீனவர்களுக்கு வழங்கப்பட்ட விசைப்படகுகள்.

*வினா எண் 86—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1979 ஆம் ஆண்டில், மீனவர்களுக்கு விசைப்படகு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) & (ஆ) பேரவையின்முன் ஒரு விவர அறிக்கை* வைக்கப் பெற்றுள்ளது.

*140-141ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது..